1971 ஜூலை 20]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அடுத்த ஆண்டுக்கு தமிழ்நாடு பாடபுத்தக நிறுவனம் என்னென்ன புத்தகங்கள் வெளியிடவேண்டும் என்பது அரசின் பரிசீலனையில் உள்ளது. இது பற்றி விரைவில் முடிவு எடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தனியார்களுக்கு வாய்ப்பினை அளிக்காமல், எல்லாப் பாட நூல்களையும் அரசாங்கமே வெளியிட ஆவன செய்ய முன்வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்தக் கொள்கையின் அடிப்படையில்தான் எல்லாப் பாடப் புத்தகங்களையும் வெளியிடுவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. 1 முதல் 10 வகுப்புகள் வரை தமிழ் பாட நூல்கள் வெளியிடப்படுகின்றன. நான்காம் வகுப்பிலிருந்து 10-ம் வகுப்புகள் வரை ஆங்கில பாடபுத்தகங்கள் ஆழ்ந்த படிப்புக்காக வெளியிடப்படுகிறது. 3-வது வகுப்பு முதல் 11-வது வகுப்பு வரை கணக்கு நூல் வெளியிடப்படுகிறது. வேறு அறிவியல், புவியியல் 11-ம் வகுப்புக்கு வெளியிடப்படுகிறது. வேறு எந்தெந்த நிலைகளில் எந்தெந்த நூல்களை வெளியிடுவதற்கு எடுத்துக் கொள்ளலாம் என்பதை யோசித்துக்கொண்டிருக்கிறோம். எந்தெந்த நூல்களை அச்சிடலாம் என்பதை ஆராய்ந்து வருகிறோம். அதற்கான குழு விரைவில் கூடி முடிவு எடுக்கும். அதன்பிறகுதான் இந்த ஆண்டில் எந்தெந்த நூல்கள் அச்சிட்டு வெளியிட எடுத்துக் கொள்ளப்படும் என்பதை அறிய முடியும்.

கோவை நகராட்சியில் பணிபுரியும் தற்காலிகத் தொழிலாளர்கள்

* 300. **வினா—திரு. என். மருதாசலம் :** மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை நகராட்சி மன்றத்தில் குடிநீர் விநியோகம், மின்சார விநியோகம், ரோடு பராமரிப்பு ஆகிய பிரிவுகளில் ஐந்து முதல் பத்தாண்டுகள் வரை என்.எம்.ஆர். கூலிகளாக வேலை செய்பவர்களை நிரந்தர பணியாளர்களாக்க அரசுக்கு உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆம். இது கோயம் புத்தூர் நகராட்சியின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். மருதாசலம் : தலைவர் அவர்களே, கோவை நகராட்சியிலே தண்ணீர் இலாகா மின்சார இலாகா மற்றும் ரோடு பராமரிப்பு இவற்றில் உள்ள தொழிலாளர்கள் 5, 10 வருடங்களாக நிரந்தரக் கூலியாக இல்லாமல் டெம்பரரியாக வேலைசெய்கிறார்கள். அவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று கோவை நகர சபைக்கு அரசாங்கம் உத்திரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பொறியல் போன்ற துறைகளில் தற்காலிகமாகப் பணி புரிந்து வருகிறார்கள். அப்படிப் பட்டவர்கள் 314 பேர்கள் பணிபுரிந்துவருகிறார்கள். அவர்களிலே

217 பேர்கள் ஆண்கள், 97 பேர்கள் பெண்கள். மின்சாரத் துறையில் 29 பேர்கள் ஆண்கள் பணிபுரிந்து வருகிறார்கள். அவர்களையெல்லாம் நிரந்தரமாக்க வேண்டுமென்ற கோரிக்கை அந்தத் தொழிலாளர்களின் சார்பிலே வைக்கப்பட்டிருக்கிறது. தொழிலாளர் துறை அலுவலர் அவர்களிலே ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை நிரந்தரமாக்கவேண்டுமென்று பரிந்துரை செய்திருக்கிறார். நகர மன்றம் தற்காலிக பணிபுரிகின்றவர்களில் யார் யாரை நிரந்தரமாக்க வேண்டுமென்று தொழிலாளர் துறை அலுவலர் ஒரு பட்டியலை அனுப்பி இருக்கிறார். அந்தப் பட்டியல் நகரமன்றத்தின் பரிசிலனையில் இருக்கிறது. அது முடிந்தபிறகு நகரமன்றம் அதுபற்றி ஒரு தீர்மானம் நிறைவேற்றி வந்தவுடனே அது அமுலாக்கப்படும்.

நகராட்சிகளில் பணிபுரியும் மின்சாரத் தொழிலாளர்கள்

*301. வினா—திரு. என். கே. பழனிசாமி : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மதுரை, கோவை, தஞ்சை ஆகிய நகரசபைகளின் கீழ் வேலை செய்யும் மின்சாரத் தொழிலாளர்கள் தங்களுக்கு மின்வாரிய ஒப்பந்தப்படி சம்பளம் தரவேண்டுமென்று 1969–70-ல் நடத்திய கிளர்ச்சியின் மீது சர்க்கார் எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நகராட்சிகளில் உள்ள பொதுப் பிரிவு மற்றும் மின்சாரப் பிரிவுகளைச் சேர்ந்த பணியாளர்கள் குறித்துத் தமிழ்நாடு இரண்டாவது சம்பள ஆணைக்குழு செய்துள்ள பரிந்துரைகள் ஏற்றுகொள்ளப்பட்டுள்ளதோடு, அவர்களின் சம்பள விதங்களும் திருத்தியமைக்கப்பட்டு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

நகராட்சிகளில் உள்ள பல்வேறு மின்சார நிறுவனங்களின் குறைகளைப் பற்றிப் பரிசிலனை செய்ய குழு ஒன்றையும் அரசு அமைத்துள்ளது. குழுவின் அறிக்கை எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. கே. டி. கே. தங்கமணி : இப்பொழுது மின்சார சப்ளை மதுரை மாநகராட்சி, தஞ்சை, கரூர், பொள்ளாச்சி ஆகிய நகராட்சி இவற்றிலே இருக்கிறது. அங்கே பணிபுரிகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்ற முறையிலே ஒரு ஸ்பெஷல் வேஜ் கமிட்டி ஜி.ஓ.எம்.எஸ்.என். 231, 1971-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 24-ம் தேதி பிரகாரம் போடப்பட்டு இருக்கிறது. இரண்டாவது சம்பளக் கமிஷன் ரிப்போர்ட் வந்தும் கூட மின்சாரப் பணியாளர்கள் சம்பள உயர்வு பெற்றும்கூட இவர்கள் பெறமுடியாத நிலைமை இருப்பதால் சீக்கிரத்தில் அந்த சிபாரிசுகளை வெளியிட்டு அவர்களுக்குச் சம்பளம் உயர்த்திக் கொடுக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா?